# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2477 - 2026 පෙබරවාරි මස 20 වැනි සිකුරාදා - 2026.02.20

2477 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 4 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 17 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, மாச்சு மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள**,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/ கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கைப் பொலிஸ்

### உதவிச் சேவை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (ஆண் / பெண்) (சட்ட உத்தியோகத்தர்) பதவி

இலங்கைப் பொலிஸில் உதவிச் சேவை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (ஆண் / பெண்) (சட்ட உத்தியோகத்தர்) பதவிக்குத் தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. கீழே வழங்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு அமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள்: "பணிப்பாளர், ஆட்சேர்ப்புப் பிரிவு, பயிலுநர் ஆட்சேர்ப்புப் பிரிவு, இல. 375, முதலாம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு, 2026, மாச்சு 20 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ மேற்கூறிய முகவரிக்குக் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது என்பதுடன், இலங்கைப் பொலிஸாரினால் விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்பட மாட்டாது.

03. விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதில் ஏற்படும் தாமதத்தினால் உண்டாகும் ஏதேனும் பாதகமான நிலைமைகளை விண்ணப்பதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

04. இந்த அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலுள்ள விளக்கங்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது இணக்கப்பாடற்ற தன்மை காணப்படின், சிங்கள மொழி அறிவித்தலே சரியானதாகக் கருதப்படும்.

05. மாதாந்தக் கொடுப்பனவுகள்: மாதாந்தக் கொடுப்பனவுகள் பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இற்கு இணங்க, சம்பளக் குறியீடு SL-1-2025 இன் கீழ் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவியின் ஆரம்ப மாதாந்தச் சம்பளத்தின் அடிப்படையில் பின்வருமாறு கணக்கிடப்படும்.

| | | *(2026)*<br>*(மாதாந்தம் ரூபா)* | *(2027)*<br>*(மாதாந்தம் ரூபா)* |
|---|---|---|---|
| மாதாந்தக் கொடுப்பனவு | | 74438.00 | 82150.00 |
| 22% கொடுப்பனவு | | 16376.36 | 18073.00 |
| விசேட கொடுப்பனவு | | 1250.00 | 1250.00 |
| வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு | | 17,800.00 | 17,800.00 |
| உணவு மற்றும் தங்குமிடக் கொடுப்பனவு | | 34,800.00 | 34,800.00 |
| கஷ்டப் பிரதேசக் கொடுப்பனவு | | 2000.00 | 2000.00 |
| தொலைபேசிக் கொடுப்பனவு | தொலைபேசி | 3000.00 | 3000.00 |
| | கையடக்கத் தொலைபேசி | 750.00 | 750.00 |
| நிருவாகக் கொடுப்பனவு | | 3000.00 | 3000.00 |

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (சட்ட உத்தியோகத்தர்) ஒருவருக்கு உத்தியோகபூர்வ வாகனத்தைப் பெற்றுக்கொள்வதற்கு உரிமை உண்டு. உத்தியோகபூர்வ வாகனத்திற்குப் பதிலாகப் தனிப்பட்ட வாகனத்தைப் பயன்படுத்துவாராயின், மாதாந்தம் ரூபா 50,000 கொடுப்பனவையும் 250 லீற்றர் எரிபொருளின் பெறுமதிக்குச் சமமான கொடுப்பனவையும் பெற்றுக்கொள்வதற்கு உரிமை உண்டு.

இந்தக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக, குறித்த பதவிக்குரிய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குக் கிடைக்கப்பெறும் நலன்புரி மற்றும் மருத்துவ வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் உரிமை உண்டு.

- ❖ இப்பதவிக்கான ஆட்சேர்ப்பு தற்காலிக அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதுடன், ஆட்சேர்ப்பின் பின்னர் அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும். அதற்காகச் செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகையானது அவ்வப்போது அறிவிக்கப்படும் தீர்மானங்களுக்கு அமைய அறவிடப்படும்.

06. **அடிப்படைத் தகைமைகள் வயது எல்லை:**

குறைந்தபட்ச வயது - 25
அதிகபட்ச வயது - 45

**கல்வித் தகைமைகள்:**

உயர் நீதிமன்றத்தில் ஒரு சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்திருத்தல் வேண்டும்.

**தொழில்முறை அனுபவம்:**

உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்ததன் பின்னர், மூன்று (03) வருடங்களுக்கு குறையாத காலப்பகுதிக்கு குற்றவியல் நீதிமன்ற மொன்றில் சட்டத்தரணியாகச் செயற்பாட்டுப் பணி புரிந்த தொழில்முறை அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அல்லது

உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்ததன் பின்னர், சட்டத் துறையில் 03 வருடங்களுக்கு குறையாத காலப்பகுதியில் பின்வரும் பணிகளில் குறைந்தது இரண்டு (02) பணிகள் தொடர்பான அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்:

i. வழக்குகள் தொடர்பான சட்ட விவகாரங்கள் மற்றும் சட்ட மாஅதிபர் திணைக்களத்துடனான ஒருங்கிணைப்புப் பணிகள்.
ii. ஒப்பந்தங்கள் தொடர்பான சட்ட விவகாரங்கள்.
iii. பல்வேறு சட்டங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் தொடர்புடைய சட்ட ஆவணங்களைத் தயாரித்தல்.
iv. பல்வேறு நியதிச்சட்ட நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படும் சட்ட ரீதியான நீதிமன்ற நடவடிக்கைகள் அல்லது விசாரணைகள்.

07. **ஏனைய தகைமைகள் :**

i. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii. விண்ணப்பதாரர்கள் இலங்கை பொலிஸாரினால் எதிர்பார்க்கப்படும் மிகச்சிறந்த நன்னடத்தையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
iii. நாட்டின் எந்தப் பகுதியிலும் கடமையாற்றக் கடமைப்பட்டிருத்தல் வேண்டும்.

❖ இப்பதவிக்கு திருமணமானவர் / திருமணம் செய்யாதவர் எவரும் விண்ணப்பிக்கலாம்.

08. **தகைமை மதிப்பீட்டுக்கான நேர்முகப்பரீட்சை :**

ஆட்சேர்ப்புக்கான தகுதிகளைப் பரிசோதிப்பதற்காகத் தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சை நடத்தப்படும். இதன் போது பின்வரும் தகைமைகள் பரிசோதிக் கப்படும்.

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான விடயங்கள்* | | *அதிகபட்சப் புள்ளிகள்* |
|---|---|---|
| 1. **மேலதிக கல்வித் தகைமைகள்** | | 25 |
| i. சட்டத்துறையில் முதுமாணிப் பட்டம் (LLM) | 10 | |
| ii. சட்டமாணிப் பட்டம் (LLB) | 08 | |
| iii. ஏனைய முதுமாணிப் பட்டங்கள் | 06 | |
| iv. ஏனைய பட்டங்கள் | 04 | |
| v. உயர்தர டிப்ளோமா / டிப்ளோமா / பாடநெறிகள் | 02 | |
| **குறிப்பு 01** – iii, iv மற்றும் v ஆகிய தகைமைகளின் கீழ் அதிகபட்சமாக 02 பாடநெறிகள் மாத்திரமே கருத்திற் கொள்ளப்படும். | | |
| **குறிப்பு 02** – i முதல் iv வரையான தகைமைகளுக்கு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகம் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பட்டச் சான்றிதழ்களுக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும். | | |
| **குறிப்பு 03** – v இற்காக SLQF 4 அல்லது 3 மட்டத்திலான சான்றிதழ்களுக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும். | | |

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான விடயங்கள்* | | *அதிகபட்சப் புள்ளிகள்* |
|---|---|---|
| **2. மேலதிக தொழில்முறை அனுபவம் :** | | 35 |
| அடிப்படைத் தகைமையைப் பெறுவதற்குத் தேவையான காலப்பகுதியைத் தவிர ஏனைய காலப்பகுதிகளுக்காகப் புள்ளிகள் வழங்கப்படும். | | |
| i. சட்டத்தரணியாக செயற்படும் தொழில்முறை அனுபவம் (06 மாதங்களுக்கு 01 புள்ளி மற்றும் ஒரு வருடத்திற்கு 02 புள்ளிகள் வீதம்). | 20 | |
| ii. பிரசித்த நொத்தாரிசு ஆக செயற்படும் தொழில்முறை அனுபவம் (06 மாதங்களுக்கு 0.5 புள்ளி மற்றும் ஒரு வருடத்திற்கு 01 புள்ளி வீதம்). | 10 | |
| iii. சட்டத்தரணியாக உயர் நீதிமன்ற வழக்குகளில் முன்னிலையாதல். | 08 | |
| iv. சட்டத்தரணியாக மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகளில் முன்னிலையாதல். | 06 | |
| v. சட்டத்தரணியாக மேல் நீதிமன்ற வழக்குகளில் முன்னிலையாதல். | 04 | |
| vi. சட்டத்தரணியாக மாவட்ட நீதிமன்ற வழக்குகளில் முன்னிலையாதல். | 02 | |
| (மேற்குறிப்பிட்ட தகைமைகளை ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.) | | |
| **3. மொழித் திறன் :** | | 15 |
| i. பயிற்று மொழிக்கு மேலதிகமாக மற்றைய தேசிய மொழிக்கு: (சிங்களம் அல்லது தமிழ்) | | |
| அ. டிப்ளோமா | 08 | |
| ஆ. உயர்தரச் சான்றிதழ்கள் | 06 | |
| இ. சான்றிதழ்கள் | 04 | |
| ஈ. க.பொ.த உயர்தரம் | 02 | |
| உ. க.பொ.த சாதாரண தரம் | 01 | |
| ii. ஆங்கில மொழி: | | |
| அ. டிப்ளோமா | 08 | |
| ஆ. உயர்தரச் சான்றிதழ்கள் | 06 | |
| இ. சான்றிதழ்கள் | 04 | |
| உ. உயர்தரம் | 02 | |
| (ஒரு மொழியில் பெற்றுள்ள ஆகக்கூடுதலான தகைமைக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்.) | | |
| **4. தகவல் தொழில்நுட்பம் :** | | 10 |
| i. டிப்ளோமா (06 மாதங்களுக்குக் குறையாதது) | 10 | |
| ii. உயர்தரச் சான்றிதழ்கள் (03 மாதங்களுக்குக் குறையாதது) | 07 | |
| iii. சான்றிதழ்கள் (ஒரு மாதத்திற்குக் குறையாதது) | 05 | |
| (கால எல்லை குறிப்பிடப்படாவிடினும், SLQF தகைமைகளுக்கு அமையப் புள்ளிகள் வழங்கப்படும்.) | | |
| 5. நேர்முகப்பரீட்சையின் போது வெளிப்படுத்தப்படும் திறமை | | 15 |
| மொத்தம் | | 100 |

8.1. தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சை சபையை நியமிக்கும் அதிகாரி: பொலிஸ் மா அதிபர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர்.

8.2. தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட முன்னுரிமைப் பட்டியலுக்கு அமைய, நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக் கைக்கு ஏற்ப போதுமான விண்ணப்பதாரர்கள் பின்னணி விசாரணைக்கு உட்படுத்தப்படு வார்கள்.

8.3. நேர்முகப்பரீட்சையில் பங்குபற்றுவது என்பது, நியமனம் பெறுவதற்கான தகுதியைப் பூர்த்தி செய்ததாகக் கருதப்படமாட்டாது.

9. **பின்னணி விசாரணை :**

9.1. மேலே 8.2 இன் படி பரிந்துரைக்கப்படும் விண்ணப்பதாரர்களின் நன்னடத்தையை உறுதிப் படுத்துவதற்காகப் பின்னணி விசாரணை நடத்தப் படும்.

9.2. விண்ணப்பதாரரின் நன்னடத்தையை உறுதிப்படுத் துவதற்காக, அவர் மற்றும் அவரது நெருங்கிய உறவினர்கள், அவருடன் நெருக்கமாகப் பழகுபவர் களின் நன்னடத்தை மற்றும் நடத்தை குறித்து விசாரணைகள் நடத்தப்படும். திருப்தியற்ற பின்னணி விசாரணை அறிக்கைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட மாட்டார்கள்.

குறிப்பு: நெருங்கிய உறவினர்கள் மீது எவ்வித குற்றவியல் பதிவுகளும் இருத்தல் கூடாது. நெருங்கிய உறவினர்கள் என்பது விண்ணப்பதாரரின் தாய், தந்தை, பாதுகாவலர்கள், உடன்பிறந்தோர் மற்றும் உடன்பிறந்தோர் திருமணமானவராயின் அவர்களின் துணைவர்கள், விண்ணப்பதாரர் திருமணமானவராயின் அவரது துணைவர் மற்றும் துணைவரின் உடன்பிறந்தோர் ஆகியோரைக் குறிக்கும்.

9.3. ஆட்சேர்ப்பின் போது விண்ணப்பதாரர்கள் தவறான தகவல்களை வழங்குவது தகுதியின்மையாகக் கருதப்படும். ஆட்சேர்ப்பின் பின்னர் தவறான தகவல்கள் வழங்கப்பட்டமை தெரியவந்தால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

10. **மருத்துவப் பரிசோதனை :**

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள், பொலிஸ் மருத்துவ சேவைப் பிரிவின் பணிப்பாளர்/வைத்தியர் உள்ளிட்ட மருத்துவச் சபையினால் நடத்தப்படும் மருத்துவப் பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். மேலும், விண்ணப்பதாரர்கள் பொலிஸ் கடமைகளுக்குப் பொருத்தமானவர்கள் என்பதை உறுதிப்படுத்த உடல் மற்றும் உள ரீதியான தகுதிப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். மருத்துவப் பரிசோதனை அறிக்கைகளை 'சுகாதாரம் 169' படிவத்தின் கீழ் பணிப்பாளர்/வைத்தியர் சமர்ப்பிக்க வேண்டும். இதில் விண்ணப்பதாரர் போதைப்பொருள் பாவனை தொடர்பான அறிக்கையும் உள்ளடக்கப்பட வேண்டும். மருத்துவப் பரிசோதனையில் தவறும் விண்ணப்பதாரர்கள் மேன்முறையீடு செய்ய முடியாது.

11. **சேவை நிபந்தனைகள் :**

i. ஆட்சேர்ப்பு செய்யப்படும் சட்டத்தரணிகள் அதிகபட்சம் 05 வருட காலப்பகுதிக்கு உட்பட்ட வகையில், அடையாளம் காணப்பட்ட குறிப்பிட்ட பணிகளில் ஈடுபடுத்தப்படுவர்.

ii. குறித்த பணிகள் நிறைவடைந்த பின்னரோ அல்லது நியமனக் காலம் முடிவடைந்த பின்னரோ தற்காலிக நியமனம் முடிவுக்குக் கொண்டுவரப்படும்.

iii. தாபனவிதிக் கோவை, நிதி ஒழுங்குவிதிகள், தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கைகள், பொது நிருவாகச் சுற்றறிக்கைகள், திறைசேரிச் சுற்றறிக்கைகள், பொலிஸ் கட்டளைகள், இலங்கை பொலிஸ் கையேடுகள் மற்றும் அறிவுறுத்தல் கோவைகளின் விதிமுறைகள் மற்றும் நடைமுறையிலுள்ள ஏனைய விதி களுக்குக் கட்டுப்பட்டு செயற்படுதல் வேண்டும்.

iv. ஒவ்வொரு நியமனமும் அரசாங்க சேவை ஆணைக் குழுவின் 2022.12.14 ஆந் திகதிய 2310/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நடைமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அவ்வப்போது விதிக்கப்படும் சட்டதிட்டங்கள் மற்றும் தாபன விதிக் கோவையின் விதிமுறைகளுக்கு உட்பட்டதாகும்.

v. இந்த உத்தியோகத்தர்கள் உயர் நீதிமன்ற விதிகளினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தரணி களுக்கான சீருடையில் கடமையாற்ற வேண்டும்.

12. **பயிற்சி :**

பொலிஸ் மா அதிபரினால் தீர்மானிக்கப்படும் ஒரு காலப்பகுதிக்கு ஆரம்பப்பணியிடைப் பயிற்சிக்கு சமுகமளித்தல் வேண்டும்.

13. விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளைத் தமது விண்ணப்பப் படிவங்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும். (மூல ஆவணங்களைச் சமர்ப்பிக்கக் கூடாது)

(அ) பிறப்புச் சான்றிதழ்

(ஆ) தேசிய அடையாள அட்டையின் பிரதி

(இ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்கள்

(ஈ) சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த மைக்கான சான்றிதழ்

(உ) தொழில்முறைத் தகைமைகளை உறுதிப்படுத்து வதற்கான சான்றிதழ்கள்

(ஊ) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள்

(எ) இரண்டு (உறவினர் அல்லாதவர்களிடமிருந்து) அண்மையில் பெறப்பட்ட நன்னடத்தைச் சான்றி தழ்கள்

(ஏ) பந்தி 08 இன் கீழான தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சையில் புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஏனைய அனைத்துச் சான்றிதழ்களினதும் பிரதிகள்.

14. விண்ணப்பதாரர்கள் கணினி மூலம் தட்டச்சு செய்யப் பட்ட விண்ணப்பப் படிவத்தை 11 x 8 அங்குல (A4) அளவிலான தாளில் பூர்த்தி செய்து, உரிய சான்றிதழ் பிரதிகளுடன் மேலே 2 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள முகவரிக்குக் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும் அதனை எந்த வொரு உத்தியோகத்தரிடமும் தனிப்பட்ட முறையில் கையளிக்கக் கூடாது.

15. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப் பாடுகளை எவ்விதத்திலேனும் உறுதிப்படுத்தாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அத்தகைய விண்ணப்பதாரர்களுக்கு அது தொடர்பாகப் பதில்கள் அனுப்பப்பட மாட்டாது.

**குறிப்பு**: பரீட்சைகள் மற்றும் நேர்முகப்பரீட்சைகளுக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்குப் பயணச் செலவுகளோ அல்லது ஏனைய செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பிரியந்த வீரசூரிய,
பொலிஸ் மாஅதிபர்.

**இலங்கைப் பொலிஸ்**

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (ஆண்/பெண்) (சட்ட உத்தியோகத்தர்) பதவிக்கான மாதிரி விண்ணப்பப் படிவம்

01. (அ) முழுப் பெயர் (தமிழில்): ....................................
...........................................................................

(தெளிவான பெரிய எழுத்துக்களில் - பிறப்புச் சான்றிதழில் உள்ளவாறே அமைதல் வேண்டும்)

(ஆ) முதலெழுத்துகளுடன் பெயர் (தமிழில்): .............
...........................................................................

(இ) முதலெழுத்துகளுடன் பெயர் (ஆங்கிலத்தில்):
...........................................................................

(ஈ) பாலினம்: ..........................................................
...........................................................................

02. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்:

...........................................................

(தேசிய அடையாள அட்டையின் பிரதி ஒன்றினை இணைத்தல் வேண்டும்)

03. (அ) தற்போதைய முகவரி: ......................................
...........................................................................
...........................................................................

(ஆ) நிரந்தர முகவரி: ...............................................
...........................................................................
...........................................................................

(இ) நிரந்தர முகவரிக்குட்பட்ட பொலிஸ் நிலையம்:
...................................................................

(ஈ) தொலைபேசி இலக்கங்கள்:

கையடக்கத் தொலைபேசி: ................................

நிலையான தொலைபேசி (வீடு): ........................

04. (அ) இனம்: ..................................................

(ஆ) நீங்கள் பரம்பரை இலங்கைப் பிரசையா? அல்லது பதிவு பெற்ற இலங்கைப் பிரசையா?:
...........................................................................
(பதிவு பெற்ற இலங்கைப் பிரசை எனின், அதன் நிழற்படப் பிரதியை இணைக்கவும்)

05. பிறந்த திகதி: ............................................................

(பிறப்புச் சான்றிதழின் பிரதி ஒன்றினை இணைத்தல் வேண்டும்)

வயது: (வர்த்தமானி அறிவித்தலின் படி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று)

வருடங்கள் :.................... மாதங்கள் : ........................ நாட்கள் : .........................

06. சமூக அந்தஸ்து: திருமணமானவர் / திருமணமாகாதவர் / கைம்பெண் / தபுதாரர்/ விவாகரத்துப் பெற்றவர்:

..........................................................

(திருமணமானவர் எனின்) வாழ்க்கைத் துணையின் தொழில்: ....................................................................

வாழ்க்கைத் துணை கடமையாற்றும் இடம்: ...........................................................................................

07. கல்வித் தகைமைகள்: ...............................................................................................................

(சித்தியடைந்த பரீட்சைகளைக் குறிப்பிட்டு, சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்)

08. தொழில்முறைத் தகைமைகள்: ...................................................................................................

(சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்)

09. பட்டப்பின் பட்டங்கள்: ................................................

(சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்)

10. தற்போதைய உத்தியோக நிலை:

(அ) தற்சமயம் வகிக்கும் பதவி: ..........................................................................................................
(ஆ) தற்போதைய பதவியின் தரம்: .......................................................................................................
(இ) தற்போதைய பணித்தளம்: ............................................................................................................

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானவை மற்றும் சரியானவை என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். மேலும், மேலே வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தவறானவை அல்லது பொய்யானவை எனத் தெரியவந்தால், நான் சேவைக்கு அமர்த்தப்பட்டிருந்தாலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கை பொலிஸ் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதை அறிவேன்.

..........................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி: ..........................................

11. திணைக்களத் தலைவரின் சான்றுப்படுத்தல் (பொருத்தமானவர்களுக்கு மட்டும்)

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு. / திருமதி / செல்வி .......................................................................... என்பவர் ................................................................................ திணைக்களத்தில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் பணிபுரிகின்றார் என்பதையும், அவர் இப்பதவிக்காகத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

.............................................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம் மற்றும்
உத்தியோகபூர்வ முத்திரை.

பதவி: .........................................................
திகதி: .........................................................

02-222

## அரசாங்க சேவை ஆணைக்குழு

### அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் (நிறைவேற்றுச் சேவைப் பிரிவின் III ஆம் தரத்துக்கான) சட்ட அதிகாரி (திணைக்கள ரீதியான) பதவிக்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2026

வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் நிறைவேற்றுத் தர சேவைப் பிரிவைச் சேர்ந்த III ஆம் தரத்துக்கான சட்ட அதிகாரி (திணைக்கள ரீதியான) பதவியின் 01 வெற்றிடத்தை நிரப்புவதற்காக இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை:**

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் தகைமைகளை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சை சபையினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் உச்ச புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரி வெற்றிடத்துக்காகச் சேர்த்துக் கொள்ளப்படுவார். அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (இல. 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளிகள் வழங்கும் நியதிகளுக்கமைவாக தகைமைகளை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

நியமனம் அமுலாகும் திகதியை அரசாங்க சேவை ஆணைக்குழு தீர்மானிக்கும்.

2. **தேவையான தகைமைகள்:**

(i) **கல்வி/தொழிற் தகைமைகள்:**

இலங்கை உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமானம் செய்திருத்தல்.

(ii) **அனுபவம்:**

உயர் நீதிமன்ற சட்டத்தரணியாகச் சத்தியப் பிரமானம் செய்ததன் பின்னர் ஒரு சட்டத்தரணியாக மூன்று (03) ஆண்டுகளுக்குக் குறையாத தொடர்ச்சியான தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல். (தொடர்ச்சியான தொழில் அனுப வத்தை உறுதிப்படுத்துவதற்காக முன்வைக்கும் ஆவணங்களில் அனுபவம் பெற்ற காலப்பகுதி, உறுதிப்படுத்துபவரின் பதவிநிலை உத்தியோகபூர்வ இலச்சினை மற்றும் உறுதிப் படுத்திய திகதி ஆகியவை தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.)

அல்லது

உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப் பிரமானம் செய்ததன் பின் ஓர் அரசாங்க நிறுவனத்தின் சட்டம் தொடர்பான பதவியில்* மூன்று ஆண்டுகளுக்குக் (03) குறையாத அனுபவம் பெற்றிருத்தல்.

(செயலாளர்/திணைக்கள/நிறுவனத் தலைவரினால் வழங்கப்பட்ட கடிதத்தின் மூலமாக உறுதிப்படுத்தியிருக்க வேண்டும்.)

குறிப்பு : அடிப்படைத் தகைமைகள் உறுதி செய்யும் ஆவணங்களின் விண்ணப்பதாரி தன்னால் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்திருக்க வேண்டும். சேவைக் காலம் ஆரம்பிக்கும் மற்றும் முடிவடையும் திகதி தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் முன் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படக் கூடும்.

** சட்டம் தொடர்பான பதவி என்பது - சட்ட இளமானிப் பட்டம் அல்லது உயர் நீதிமன்ற சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமானம் செய்திருத்தல் ஆட் சேர்ப்புக்கான அடிப்படைத் தகைமைகளாகக் கருதும் பதவிகளாகும்.*

(iii) **உடற் தகைமைகள்:**

அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எந்தப் பிரதேசத்திலும் சேவையில் ஈடுபடுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ரீதியான தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) **வேறு தகைமைகள்:**

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- விண்ணப்பம் கோரும் இறுதித் திகதிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான தகைமைகள் அனைத்தையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்:

(i) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்குரியது. உங்களுக்குரிய ஓய்வூதியம் தொடர்பாக எதிர் காலத்தில் அரசினால் எடுக்கப்படும் கொள்கை ரீதியான முடிவுகளுக்கு நீங்கள் கட்டுப்பட

வேண்டும். நீங்கள் விதவை / தபுதாரர் மற்றும் அநாதைப் பிள்ளைகளின் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்ய வேண்டும். அரசினால் அவ்வப்போது வகுக்கப்படும் ஏற்பாடுகளுக்கமைவாக நீங்கள் அதற்கான நிதிப் பங்களிப்பைச் செலுத்த வேண்டும்.

(ii) இப் பதவி மூன்று வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டதாகும். பதவிக்கு இணைக்கப்பட்டு 03 ஆண்டுகளுக்குள் ஆட்சேர்ப்பு ஏற்பாடுகளில் குறிப்பிட்டுள்வாறு முதலாவது தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(iii) 2020.10.16 திகதியுடைய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 18/2020 இற்கு அமைவாக உரிய அடுத்த அரசகரும மொழித் தேர்ச்சியைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

(iv) இந் நியமனமானது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவைக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டதாகும்.

(v) விண்ணப்பிக்கும் மொழிமூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலமே நீங்கள் நியமனம் பெறுவதற்குத் தகுதியான மொழிமூலமாகக் கருதப்படும்.

4. **வயதெல்லை:**

விண்ணப்பம் கோரும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்குக் குறையாமலும் 45 வயதைத் தாண்டாமலும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத் திட்டம்:**

2025-03-25 ஆம் திகதியுடைய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல. 10/2025 இன் ஏற்பாடுகளுக்கமைவாக இப் பதவிக்கான மாதாந்த சம்பள அளவுத் திட்டமானது ரூபா 82,150 – 10 × 2,400 - 8 × 2,940 – 17 × 3,900 – ரூபா 195,970.00 (SL-1-2025) ஆகும்.

6. தகுதியை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சைக்காகப் பின்வரும் புள்ளிகள் வழங்கும் முறைமை அடிப்படையாகக் கொள்ளப்படும்.

| *தொடர் இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *உச்சப் புள்ளி* |
|---|---|---|---|
| 1 | **மேலதிக கல்வித் தகைமைகள் :**<br>(அ)<br>(I) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரசாங்க பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் சட்டம் தொடர்பான பட்டப் பின் படிப்புப் பட்டம்<br>அல்லது | | 25 |
| | (II) இலங்கைப் பாராளுமன்றச் சட்டம் ஒன்றின் மூலம் நிறுவப்பட்ட பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் சட்டம் தொடர்பான பட்டப் பின் படிப்புப் பட்டம்<br>அல்லது<br>(III) 1978 இல. 16 பல்கலைக்கழகச் சட்டத்தின் 25 A பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட சட்டம் தொடர்பான பட்டப் பின் படிப்புப் பட்டம் | 25 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் பெறப்பட்ட சட்டம் தொடர்பான பட்டப் பின் படிப்பு டிப்ளோமா அல்லது இலங்கை சட்டக் கல்லூரியின் உயர் சட்டக் கல்வி நிறுவனத்தினால் பெறப்பட்ட சட்டப் பின் படிப்பு தொடர்பான டிப்ளோமா | 20 | |

<table>
<tr><th>தொடர் இல.</th><th>விடயம்</th><th>புள்ளிகள்</th><th>உச்சப் புள்ளி</th></tr>
<tr><td></td><td>(இ)<br>(I) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் பெற்ற<br>அல்லது<br>(II) இலங்கைப் பாராளுமன்றச் சட்டம் ஒன்றின் மூலம் நிறுவப்பட்ட பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும்<br>அல்லது<br>(III) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 25 A பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட<br>• முதலாம் வகுப்புச் சித்தியுடன் கூடிய சட்ட இளமானிப் பட்டம்<br>• இரணடாம் வகுப்புச் சித்தியுடன் கூடிய சட்ட இளமானிப் பட்டம்<br>• வகுப்பு சித்தியுடன் கூடிய சட்ட இளமானிப் பட்டம்<br>• சாதாரண சித்தியுடன் கூடிய சட்ட இளமானிப் பட்டம்<br><br>(ஈ) சட்டக் கல்லூரியின் இறுதியாண்டு முதலாம் வகுப்புச் சித்தி<br>சட்டக் கல்லூரியின் இறுதியாண்டு இரண்டாம் வகுப்புச் சித்தி<br>குறிப்பு: I. சட்டக் கல்லூரி இறுதிப் பரீட்சையில் கௌரவ சித்தியுடன் சித்தியடைந்திருந்தால் மாத்திரம் மேற்கூறப்பட்ட 05 புள்ளிகள் வழங்கப்படும்.<br>குறிப்பு: II. உயர் தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.</td><td><br><br><br><br><br><br><br><br>15<br>10<br>07<br>05<br><br>10<br>05</td><td></td></tr>
<tr><td>02</td><td>மேலதிக அனுபவம்<br><br>வழக்குகளுக்கான ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் திறந்த நீதிமன்றத்தில் வாதாடுதல்<br><br><table><tr><th></th><th>வழக்குத் தொடருதல் (ஒரு வழக்கிற்காக)</th><th>நீதிமன்றத்தில் தோன்றி வாதாடுதல் (ஒரு வழக்கிற்காக)</th></tr><tr><td>உயர் நீதிமன்றம்</td><td>2</td><td>5</td></tr><tr><td>மேல் முறையீட்டு நீதிமன்றம்</td><td>2</td><td>4</td></tr><tr><td>மேல் நீதிமன்றம்</td><td>2</td><td>3</td></tr><tr><td>மாவட்ட நீதிமன்றம்</td><td>4</td><td>5</td></tr><tr><td>நியாய சபை</td><td>2</td><td>3</td></tr></table><br>குறிப்பு -<br><br>மேற் கூறப்பட்ட தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக அந்த வழக்குத் தீர்ப்புகளின் பிரதி அல்லது இறுதியாகத் தோற்றிய வழக்கு இடம்பெற்ற திகதியின் வழக்கு அறிக்கையின் அத்தாட்சி செய்யப்பட்ட பிரதியொன்றை நேர்முகப் பரீட்சை சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.</td><td></td><td>35</td></tr>
</table>

| *தொடர் இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *உச்சப் புள்ளி* |
|---|---|---|---|
| 03 | **தகவல் தொழில்நுட்பம் /தகவல் தொழில்நுட்ப சட்டம் தொடர்பான அறிவு :** | | 10 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டத்திற்காக தகவல் தொழில்நுட்பம் அல்லது கணினி விஞ்ஞானப் பாடத்தைப் பிரதான பாடமாகக் கற்றிருந்தால் | 10 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது இலங்கைச் சட்டக் கல்லூரியில் அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு தொழில்சார் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டம் தொடர்பான டிப்ளோமா | 08 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெறப்பட்ட கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா அல்லது வேறு நிறுவனத்தினால் வழங்கப்பட்ட கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பான NVQ 5 அல்லது அதற்கு மேற்பட்ட டிப்ளோமா | 05 | |
| | (ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் அல்லது இலங்கைச் சட்டக் கல்லூரியில் அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு தொழில்சார் நிறுவனத்தினால் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டத் துறையின் பாடநெறிகளைக் கற்ற/பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்றிப் பெறப்பட்ட சான்றதழ்கள் (ஒரு சான்றிதழுக்கு 02 புள்ளிகள் வீதம் ஆகக்கூடியதாக இரண்டு சான்றிதழ்களுக்குப் புள்ளிகள் வழங்கப்படும்)<br><br>*குறிப்பு*: உயர் தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். | 04 | |
| 04 | **மொழித் தேர்ச்சி :** | | 15 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பாடம் பிரதான பாடமாக உள்ளடக்கப் பட்டுப் பெற்ற பட்டம் | 15 | |
| | (ஆ) அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச அல்லது தேசிய மட்டத்திலான மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் (Moot Court Competitions) ஆங்கில மொழி தொடர்பான புலமை<br>தனி நபர்<br>(I) முதலாமிடம்/ சிறந்த திறமை - 12<br>(II) இரண்டாமிடம் - 10<br>(III) மூன்றாமிடம்/வேறு திறமை - 08<br>குழு<br>(I) முதலாமிடம்/ சிறந்த திறமை - 10<br>(II) இரண்டாமிடம் - 08<br>(III) மூன்றாமிடம்/வேறு திறமை - 06 | 12 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழிக்காகப் பெறப்பட்ட டிப்ளோமா அல்லது வேறு ஒரு நிறுவனத்தில் ஆங்கில மொழிக்காகப் பெற்ற SLQF3 அல்லது அதற்கு மேல் மட்டத்திலான டிப்ளோமா அல்லது அரச பயிற்சி நிறுவனத்தில்/ அரச பயிற்சி நிறுவனத்துடன் இணைந்த நிறுவனத்தில் குறைந்த பட்சம் ஆங்கில மொழியை 1500 மணி நேரம் கற்றுப் பெறப்பட்ட டிப்ளோமா | 10 | |

| *தொடர் இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *உச்சப் புள்ளி* |
|---|---|---|---|
| | (ஈ) கல்விப் பொதுத் தராதர (உயர் தரம்) பரீட்சையில் அல்லது Edexcel அல்லது Cambridge உயர் தரப் பரீட்சையில் ஆங்கில மொழிக்காக அதி உயர் சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு அண்மித்த இரண்டு ஆண்டுகளுள் IELTS மொத்தமாக 6.5 (அனைத்து பாடங்களுக்கும் குறைந்தபட்சம் 06 உள்ளடங்கலாக) அல்லது அதற்கு மேல் TOEFL – IBT 79 அல்லது அதற்கு மேற்பட்ட TOEFL – CBT 213 அல்லது அதற்கு மேல் அல்லது TOEFL – PBT 550 அல்லது அதற்கு மேல் பெற்றிருத்தல் | 08 | |
| | (உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழிக்காகப் பெறப்பட்ட உயர் சான்றிதழ் அல்லது வேறு நிறுவனத்தினால் ஆங்கில மொழிக்காகப் பெற்ற LQF 2 மட்டத்திலான சான்றிதழ் | 05 | |
| | *குறிப்பு*: உயர் தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். | | |
| 05 | **நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கும் திறமை**<br>பதவியின் கடமைகளை நிறைவேற்ற தகுதி பெறும் விண்ணப்பதாரியின்<br>○ வலிமை (Strength questions) ( 02 புள்ளிகள்)<br>○ சந்தர்ப்பத்துக்கேற்ப முடிவெடுக்கும் திறன் (Situational questions) (03 புள்ளிகள்) மற்றும்<br>○ திறமை (Competency questions) ( 10 புள்ளிகள்)<br>ஆகியவற்றை மதிப்பிடும் நோக்குடன் வினவும் வினாக்களுக்கு வழங்கும் விடைகளுக்கேற்ப புள்ளிகள் வழங்கப்படும். | | 15 |

7. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்:**

பூரணமான விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரமே திறமைகளை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

நேர்முகப் பரீட்சையின் போது அனைத்து சான்றிதழ்களினதும் முதல் பிரதி மற்றும் விண்ணப்ப தாரியினாலேயே உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளையும் சமர்ப்பிக்க வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகளின் அடையாளத்தை உறுதி செய்வதற்காகப் பின்வரும் அடையாள ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தின் தேசிய அடையாள அட்டை:
(ii) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

8. **விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டிய முறை:**

(i) விண்ணப்பங்கள் 2026.03.20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு "பணிப்பாளர், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம், மாஹேனவத்த, பிட்டிபன, ஹோமாகம" எனப்படும் விலாசத்திற்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அதன் பின் கிடைக்கும் விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்க வேண்டிய விண்ணபத்தின் மாதிரி யொன்று இவ் அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் அவர் களின் விண்ணப்பத்தை A4 அளவிலான தாளில் முதல் பக்கத்தில் 1 - 4 வரையும், இரண்டாவது பக்கத்தில் 5 - 9 வரையும், மூன்றாவது பக்கத்தில் 10 - 12 வரையுமான விடயங்கள் உள்ளடங்கும் விதத்தில் தயாரித்து தமது கையெழுத்தினால் பூர்த்தி செய்ய வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் " நிறைவேற்றுத் தர சேவைப் பிரிவைச் சேர்ந்த III ஆம் தரத்திற்கான சட்ட அதிகாரிப் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல்" எனக் குறிப்பிட வேண்டும்.

(iv) விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப் பத்தை அரசாங்கப் பாடசாலை அதிபர்/ சமாதான நீதவான்/ சத்திய ஆணையாளர்/ சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படையின் பதவி

நிலை அதிகாரி அல்லது ரூபா 82,150.00 அல்லது அதற்கு மேற்பட்ட மாதாந்த ஒன்றிணைந்த சம்பளம் பெறும் அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியை வகிக்கும் அதிகாரியினால் உறுதி செய்யப்பட வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவையில் உள்ள அதிகாரிகள், தமது திணைக்கள / நிறுவன தலைவரினூடாகத் தமது விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

(vi) இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்புடையதற்ற விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தொலைந்தமை அல்லது தாமதமாகியமை தொடர்பாக எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9. **போலித் தகவல்கள் வழங்குதல்:**

உங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் போலியானது அல்லது பிழையானது என ஆட்சேர்ப்புக்கு முன் அறியக்கிடைத்தால் உங்கள் விண்ணப்பத்தன்மை இரத்துச் செய்யப்படும். அவ்வாறு போலியான அல்லது பிழையான தகவல் ஆட்சேர்ப்பின் பின் அறியக்கிடைத்தால் அதற்குரிய நடவடிக்கைகளுக்குக் கட்டுப்பட்டு சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. வெற்றிடத்தை நிரப்புதல் அல்லது நிரப்பாது இருத்தல் தொடர்பான உரிமை அரசாங்க சேவை ஆணைக்குழு வசமானதாகும்.

11. இவ் வர்த்தமானி அறிவித்தலில் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான அறிவித்தல்களில் ஏதேனும் இணக்கமற்ற தன்மை ஏற்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள அறிவித்தல் ஏற்புடையதாகும்.

12. இவ் அறிவித்தலில் உள்ளடங்காத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பாக அல்லது இவ் ஆட்சேர்ப்புச் செயற்பாட்டினுள் ஏதேனும் சிக்கலான நிலைமை ஏற்பட்டால் அது தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக் குழுவின் முடிவு இறுதி முடிவாகும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் படி,

கே. ஏ. விமலேந்திரராஜா,
செயலாளர்,
வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும்
கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு.

2026 .......................... ஆம் திகதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் (நிறைவேற்றுச் சேவைப் பிரிவின் III ஆம் தரத்திற்கான) சட்ட அதிகாரி (திணைக்கள ரீதியான) பதவிக்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2026**

(அலுவலக உபயோகத்திற்காக)

(விண்ணப்பிக்கும் மொழி மூலத்திற்கான இலக்கத்தை எழுதுக)

சிங்களம் -2/ தமிழ் -3/ஆங்கிலம் - 4

குறிப்பு:- விண்ணப்பிக்கும் மொழி மூலம் மாற்ற முடியாது.

1.0 1.1 முழுப் பெயர் (திரு./திருமதி/செல்வி ) :.......................................................................................
(சிங்களத்தில்/தமிழில்) .......................................................................................

1.2. முழுப் பெயர் :.......................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) .......................................................................................

1.3 முதல் எழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி ):....................................................
(சிங்களத்தில்/தமிழில்) ..........................................................................................

1.4 முதல் எழுத்துக்களுடன் பெயர் : ........................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) .......................................................................................

2.0 2.1 நிரந்தர முகவரி : ..........................................................................................
(சிங்களத்தில்/ தமிழில்) ..........................................................................................

2.2 நிரந்தர முகவரி : ..........................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) ..........................................................................................

3.0 3.1 பால் நிலை: ஆண் – 0, பெண் - 1 ☐ (இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

3.2 திருமணமான/ திருமணமாகாத நிலை (திருமணமானவர் -1/ திருமணமாகாதவர் -2) ☐

3.3 பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.4 விண்ணப்பம் கோரும் இறுதி நாளுக்கு வயது:

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

3.5 தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

4.0 கையடக்கத் தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

5.0 இனத் தொகுதி (சிங்களம்-1, தமிழ் -2, இந்தியத் தமிழர்-3, முஸ்லிம் -4, வேறு -5) ☐

உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்.

6.0. கல்வித் தகைமைகள்:

| 6.1 | பட்டம் | நிறுவனம் | திகதி |
|---|---|---|---|
| | ................................ | ............................... | ...................... |
| | ................................. | ................................. | ...................... |

7.0 உயர் நீதி மன்றத்தில் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமானம் செய்த திகதி :................................

7.1. சத்தியப்பிரமானம் செய்ததன் பின் 03 வருட அனுபவம் பூர்த்தி செய்யப்பட்ட திகதி: .............................................
.............................

7.2. அரசாங்க நிறுவனமொன்றில் சட்டத் துறைப் பதவியில் 03 வருட அனுபவம் பூர்த்தியாகும் திகதி: .........................
.............................................

*அடிப்படைத் தகைமைகள் உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் / ஆவணங்கள் உண்மையானவை என்பதை விண்ணப்பதாரியே உறுதி செய்து விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

8.0. விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில் இல. 06 இன் கீழான ஒவ்வொரு தகைமைகள் தொடர்பான விபரங்கள் :-

8.1 மேலதிக கல்வித் தகைமைகள்:
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

8.2 மேலதிக தொழில் அனுபவங்கள்:
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

8.3 மொழித்திறன்:
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

8.4 தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு:
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

* மேலதிக தகைமைகள் உறுதிப்படுத்தும் ஆவணங்கள் விண்ணப்பத்துடன் அனுப்பத் தேவையில்லை. அவற்றை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிப்பதற்குத் தயாராக வைத்துக்கொள்வது விண்ணப்பதாரரின் பொறுப்பாகும்.

9.0. நீங்கள் எப்போதாவது ஒரு குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா?
(ஆம் எனில் விபரங்கள்)

..........................................................................................................................................................

10.0 விண்ணப்பதாரரின் உறுதிப்படுத்தல் :

இவ் விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என்பதையும், அனைத்து பகுதிகளும் சரியாகப் பூர்த்தி செய்துள்ளேன் என்பதையும், எனது இக் கூற்று போலியானது என நிரூபிக்கப்பட்டால் நியமனம் பெற எனக்குத் தகுதியில்லை என்பதையும் மற்றும் நியமனம் பெற்றதன் பின் பணியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவதோடு அனைத்து சட்டவிதிகளுக்கும் நான் கட்டுப்படுவேன் எனவும் கூறுகின்றேன்.

............................ ....................................
திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

11.0 விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:

இவ் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ........................................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் ..............................திகதி என் முன்னிலையில் அவரின் கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

............................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

முழுப் பெயர் : ............................................
பதவி : ................................................
திகதி : ...............................................
(பதவி நிலை முத்திரையினால் உறுதிப்படுத்தவும்)

12.0 திணைக்கள/ நிறுவனத் தலைவரின் உறுதிப்படுத்தல்:
(தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளோர் மாத்திரம்)

மேலே விபரங்கள் கூறப்பட்டுள்ள திரு./திருமதி/செல்வி ................................................................ தற்போது இந் நிறுவனத்தில் பணியாற்றுகின்றார் என்பதையும், அவரினால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்பதையும், அவரின் வேலைகள் மற்றும் வருகை திருப்திகரமானது என்பதையும், அவருக்கு எதிராக எவ்விதக் குற்றச்சாட்டுகளும் இல்லை என்பதையும், இப் பதவிக்காகத் தெரிவு செய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.......................................................,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்

பெயர் : ............................................

பதவிப் பெயர் : ............................................

விலாசம் : ............................................

திகதி : ............................................

(பதவி நிலை முத்திரை)

02-277

---

**தகவலுக்கான உரிமை ஆணைக்குழு**

**(2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது)**

தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் சட்ட உதவியாளர் பதவிக்கு கீழுள்ள தகைமைகளைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதவிக்கு முகாமைத் துவச் சேவைத் திணைக்களத்தின் சுற்றுநிரூப இல. 01/2025 இன் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

**சட்ட உதவியாளர் - பதவி 01**

**தகைமைகள் :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம் சார்ந்த பட்டமொன்றை பெற்றிருத்தல்.

**வயது :**

22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத் திட்டம்:**

MA 3-2025 ரூபா (53,940 – 10 × 800 - 11 × 1,190 – 10 × 1,320 – 5 X 1,350 - ரூபா 94,980.00).

**ஆட்சேர்ப்பு முறை :**

**கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை**

1. மேலதிக அனுபவம் - 30 புள்ளிகள்
2. மேலதிக தகைமைகள் - 30 புள்ளிகள்
3. வேறு திறமைகள் மற்றும் செயற்பாடுகள் - 15 புள்ளிகள்
4. நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமைகள் - 25 புள்ளிகள்

மொத்தப் புள்ளிகள் - 100 புள்ளிகள்

விண்ணப்பதாரர்கள் தங்களது சான்றுறுதிப்படுத்திய சான்றிதழ்களின் பிரதிகளுடன் தங்களால் தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவை அடங்கிய விண்ணப்பத்தை 2026.03.09 ஆந் திகதி பி. ப. 4.00 க்கு முன்னர் கிடைக்குமாறு கீழ்க் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும். கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "சட்ட உதவியாளர்" என பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்,
தகவலுக்கான உரிமை ஆணைக்குழு,
அறை இலக்கம் 203,
கட்டட இலக்கம் 02
பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபம்,
கொழும்பு 07.

02-327/1

**தகவலுக்கான உரிமை ஆணைக்குழு**

**(2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது)**

தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் முகாமைத்துவ உதவியாளர் (சுருக்கெழுத்தாளர் மற்றும் தட்டச்சு) பதவிக்கு கீழுள்ள தகைமைகளைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப் பதவிக்கு முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் சுற்றுநிரூப இல. 01/2025 இன் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

**முகாமைத்துவ உதவியாளர் (சுருக்கெழுத்தாளர் மற்றும் தட்டச்சு) - பதவி 01**

**தகைமைகள் :**

A. கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில்

   i. சிங்களம்/ தமிழ்
   ii. கணிதம்
   iii. ஆங்கிலம்

   ஆகிய பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியும் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

   கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில் குறைந்தது மூன்று பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

B. மூன்றாம் நிலைக் கல்வி - தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் சுருக்கெழுத்து தொடர்பில் 06 மாதத்திற்கு குறையாத கற்கை/நெறியொன்றை கற்றிருத்தல்.

**வயது :**

18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயது எல்லை பொருந்தாது.

**சம்பள அளவுத் திட்டம்:**

MA 1-2-2025 ரூபா (46,220 – 10 × 540 - 7 × 630 – 12× 1,080 – 12 X 1,280 - ரூபா 84,350.00)

**ஆட்சேர்ப்பு முறை :**

**கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை**

1. மேலதிக அனுபவம் - 30 புள்ளிகள்
2. மேலதிக கல்வித் தகைமைகள் - 30 புள்ளிகள்
3. ஏனைய செயற்திறன் மற்றும் திறமைகள் - 15 புள்ளிகள்
4. நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கும் திறமைகள்- 25 புள்ளிகள்
   மொத்தப் புள்ளிகள் - 100 புள்ளிகள்

விண்ணப்பதாரர்கள் தங்களது சான்றிதழ்களின் பிரதிகளுடன் தங்களால் தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவை அடங்கிய விண்ணப்பத்தை 2026.03.09 ஆந் திகதி பி. ப. 4.00 க்கு முன்னர் கிடைக்குமாறு கீழ்க் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும். கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "முகாமைத்துவ உதவியாளர் (சுருக்கெழுத்தாளர் மற்றும் தட்டச்சு)" என பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்,
தகவலுக்கான உரிமை ஆணைக்குழு,
அறை இலக்கம் 203,
கட்டட இலக்கம் 02,
பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபம்,
கொழும்பு 07.

02-327/2

---

**திருத்தம்**

**அரசாங்க சேவை ஆணைக்குழு**

**நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு**

**சட்ட மாஅதிபர் திணைக்களத்துக்கு அரச சட்டவாதிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2025**

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைக்கிணங்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2025.11.28 ஆந் திகதிய 2,465 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, சட்ட மாஅதிபர் திணைக்களத்துக்கு அரசாங்க சட்டவாதிகள் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியானது 2026.02.28 ஆந் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால அறியத் தருகின்றேன்.

02. மேலும், மேற்கூறிய கால நீடிப்பின் பிரகாரம், இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தவதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்ய வேண்டிய திகதியான 2025.12.28 ஆந் திகதி, மேற்கூறிய கால நீடிப்பினால் மாற்றமடையாது என்பதையும், ஏற்கனவே இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மீண்டும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டியதில்லை என்பதையும் மேலும் அறியத்தருகின்றேன்.

அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

சட்ட மாஅதிபர்.

சட்ட மாஅதிபர் திணைக்களம்,
கொழும்பு -12,
2026, பெப்புருவரி 17.

02-397

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

எனது இலக்கம் : DNA2/MA7/3/9

## தேசிய சுவடிகள் காப்பக திணைக்களம் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதியின் கட்டிடப் பராமரிப்பு உத்தியோகத்தர் (சிவில்) மற்றும் கட்டிடப் பராமரிப்பு உத்தியோகத்தர் (இயந்திர) பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதியின் கட்டிடப் பராமரிப்பு உத்தியோகத்தர் (சிவில்) மற்றும் கட்டிடப் பராமரிப்பு உத்தியோகத்தர் (இயந்திர) பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகுதியுடைய இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. இப்பரீட்சை மூலம் தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதியின் கட்டிடப் பராமரிப்பு உத்தியோகத்தர் (சிவில்)(பதவி 01) மற்றும் கட்டிடப் பராமரிப்பு உத்தியோகத்தர் (இயந்திர) (பதவி 01) தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள். விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2026, மாச்சு ஆம் மாதம் 20 ஆந் திகதியாகும்.

02. **பதவியில் ஒப்படைக்கப்படும் பணிகள்:**

| *அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர்கள்* | *பணிகள்* |
|---|---|
| கட்டிடப் பராமரிப்பு உத்தியோகத்தர் (சிவில்) | தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களம் மற்றும் அதன் கிளை அலுவலக வளாகங்களில் கட்டிடங்கள், வீதிகள், நீர்க் குழாய்கள், கழிவுநீர்க் கால்வாய்கள் மற்றும் பக்கக் கால்வாய்கள், மின்சார விநியோகம் மற்றும் மின்சாரம் தொடர்பான அனைத்து அங்கங்கள், நிலப்பரப்புப் பராமரிப்பு மற்றும் அது தொடர்பான திருத்த வேலைகள் குறித்த தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல் மற்றும் பராமரிப்புப் பிரிவின் சேவைகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர், தேசிய சுவடிகள் காப்பக பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்), தேசிய சுவடிகள் காப்பகப் பணிப்பாளர் (நிர்வாகம்) மற்றும் தேசிய சுவடிகள் காப்பகப் பணிப்பாளர் நாயகம் ஆகியோரினால் ஒப்படைக்கப்படும் பதவிக்குரிய ஏனைய கடமைகள். |
| கட்டிடப் பராமரிப்பு உத்தியோகத்தர் (இயந்திரம்) | தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களம் மற்றும் அதன் கிளை அலுவலக வளாகங்களிலுள்ள அனைத்துக் குளிரூட்டிகள், ஈரப் பதன் கட்டுப்பாட்டுக் கட்டமைப்புகள், கட்டிடப் பராமரிப்புக் கட்டமைப்புகள், CCTV கண்காணிப்பு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள், மின்பிறப்பாக்கிகள் மற்றும் அனைத்து இயந்திர உபகரணங்களையும் முறையாகப் பேணுதல் மற்றும் பராமரித்தல், அத்துடன் நிர்வாக உத்தியோகத்தர், தேசிய சுவடிகள் காப்பக பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்), தேசிய சுவடிகள் காப்பகப் பணிப்பாளர் (நிர்வாகம்) மற்றும் தேசிய சுவடிகள் காப்பகப் பணிப்பாளர் நாயகம் ஆகியோரினால் ஒப்படைக்கப்படும் பதவிக்குரிய ஏனைய கடமைகள். |

03. **சேவை நிபந்தனைகள்:**

(அ) அரசாங்க சேவையின் நியமனங்களை நிர்வகிக்கும் பொதுவான நிபந்தனைகளுக்கு, 2018.06.05 ஆந் திகதிய பொதுச் சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அந்த ஆட்சேர்ப்பு நடைமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இதன்பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள அல்லது திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கும் கட்டுப்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்தி கட்டிடப் பராமரிப்பு உத்தியோகத்தர் (சிவில்) மற்றும் கட்டிடப் பராமரிப்பு உத்தியோகத்தர் (இயந்திர) பதவிக்கு நியமிக்கப்படுவார்.

(ஆ) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். இந்த பதவி ஓய்வூதியத்துடன் கூடியது எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், எதிர்வரும் காலங்களில் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள உத்தியோகத்தர்களின் ஓய்வூதியத்திட்டம் குறித்து அரசாங்கத்தினால் தொடர்ந் தேர்ச்சையாக எடுக்கப்படும் கொள்கைசார்

தீர்மானங்களுக்கும் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும். மேலும் நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றுக்கும் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் விதத்தில் நீர் அதற்கான பங்களிப்புத் தொகையை செலுத்துதல் வேண்டும்.

(இ) இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவை வகுதியின் கட்டிடப் பராமரிப்பு உத்தியோகத்தர் (சிவில்) மற்றும் கட்டிடப் பராமரிப்பு உத்தியோகத்தர் (இயந்திர) III ஆந் தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 03 வருடங்களினுள் ஆட்சேர்ப்பு நடைமுறை ஒழுங்கில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாம் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சைக்கு மேலதிகமாக திணைக்களப் பரீட்சையிலும் சித்தியெய்தல் வேண்டும்.

(ஈ) தமக்கு வழங்கப்படும் பதவிக்குரிய கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறும் பட்சத்தில் அவ்விண்ணப்பதாரிகளினது நியமனங்களை இரத்துச் செய்வதற்கு தேசிய சுவடிகள் கூட பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரமுண்டு.

04. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம் :**

பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் படி, தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதியின் கட்டிடப் பராமரிப்பு உத்தியோகத்தர் (சிவில்) / கட்டிடப் பராமரிப்பு உத்தியோகத்தர் (இயந்திர) தரம் III இற்குரிய சம்பள அளவுத்திட்டம் MN 3 - 2025 ரூபா 52,250.00 -10 x 800 -11 x 1,190 - 10 x 1,320 - 10 x 1,350 - ரூபா 100,040.00 (ஆரம்ப சம்பளப் படிமுறை - 52,250.00) ரூபாவாகும். இதற்கு மேலதிகமாக அரசாங்க ஊழியர்களுக்கு அரசினால் அவ்வப்போது செலுத்தப்படும் ஏனைய படிகளுக்கும் தாங்கள் உரித்துடையவராவீர்கள்.

05. **ஆட்சேர்ப்பிற்கான தகைமைகள் :**

| *பதவி* | *(அ) கல்வித் தகைமைகள்* | *(ஆ) தொழிற்துறைத் தகைமைகள்* | *(இ) அனுபவம்* |
|---|---|---|---|
| கட்டிடப் பராமரிப்பு உத்தியோகத்தர் (சிவில்)<br><br>(III ஆந் தரம்) | க.பொ.த. (சா.தரம்.) பரீட்சையில்<br><br>சிங்களம் / தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் (06) ஒரே தடவையில் சித்தியெய்திருத்தல் மற்றும் இரு தடவை களுக்கு மேற்படாத எண்ணிக் கையில் ஆங்கிலப் பாடத்தில் சித்தி யெய்திருத்தல்,<br><br>மற்றும் | I. மொறட்டுவைப் பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹார்டி நிறு வனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா<br><br>அல்லது<br><br>II. தேசிய பயிலுநர் மற்றும் கைத் தொழில் பயிற்சி அதிகாரசபையி னால் (NAITA) வழங்கப்படும் பொறி யியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா<br><br>அல்லது<br><br>III. உயர் கல்வி அமைச்சினால் வழங்கப் படும் தேசிய பொறியியல் உயர் டிப்ளோமா<br><br>அல்லது<br><br>IV. இலங்கை திறந்த பல்கலைக்கழகத் தினால் வழங்கப்படும் தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா<br><br>அல்லது | ஏற்புடையதற்றது |

| *பதவி* | *(அ) கல்வித் தகைமைகள்* | *(ஆ) தொழிற்துறைத் தகைமைகள்* | *(இ) அனுபவம்* |
|---|---|---|---|
| | க.பொ.த உயர்தரப் பரீட்சையில் பௌதீகவியல், இரசாயனவியல் மற்றும் இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டு (02) பாடங்களுடன் மொத்தம் மூன்று பாடங்களில் ஒரே தடவையில் (சாதாரண பொது அறிவுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியெய்திருத்தல். | V. இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையின் பகுதி I இனை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.<br>அல்லது<br>VI. தொழில் துறைக்குரிய தேசிய தொழில்சார் தகைமை (NVQ) மட்டம் 06 இனைப் பூர்த்தி செய்திருத்தல்.<br>அல்லது<br>VII. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில் நுட்பச் சான்றிதழ்களை வழங்கிய நிறுவனங்களிடம் வினவி கருத்துக் களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர், மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பத் தகைமைகளுக்கு அனைத்து விதத்திலும் சமமானது என மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல். | |
| கட்டிடப் பராமரிப்பு உத்தியோகத்தர் (இயந்திர)<br>(III ஆந் தரம்) | க.பொ.த. (சா.தரம்.) பரீட்சையில் சிங்களம் / தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் (06) ஒரே தடவையில் சித்தியெய்திருத்தல் மற்றும் இரு தடவைகளுக்கு மேற்படாத எண்ணிக்கையில் ஆங்கிலப் பாடத்தில் சித்தியெய்திருத்தல்,<br>மற்றும்<br>க.பொ.த உயர்தரப் பரீட்சையில் பௌதீகவியல், இரசாயனவியல் மற்றும் இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டு (02) பாடங்களுடன் மொத்தம் மூன்று பாடங்களில் ஒரே தடவையில் (சாதாரண பொது அறிவுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியெய்திருத்தல். | I. மொறட்டுவைப் பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹார்டி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா<br>அல்லது<br>II. தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையினால் (NAITA) வழங்கப்படும் பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா<br>அல்லது<br>III. உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் உயர் டிப்ளோமா<br>அல்லது<br>IV. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா<br>அல்லது<br>V. இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையின் பகுதி I இனை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.<br>அல்லது | ஏற்புடையதற்றது |

| பதவி | (அ) கல்வித் தகைமைகள் | (ஆ) தொழிற்துறைத் தகைமைகள் | (இ) அனுபவம் |
|---|---|---|---|
| | | VI. தொழில் துறைக்குரிய தேசிய தொழில்சார் தகைமை (NVQ) மட்டம் 06 இனைப் பூர்த்தி செய்திருத்தல்.<br><br>அல்லது<br><br>VII. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில் நுட்பச் சான்றிதழ்களை வழங்கிய நிறுவனங்களிடம் வினவி கருத்துக் களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில் நுட்பத் தகைமைகளுக்கு அனைத்து விதத்திலும் சமமானது என மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல். | |

(ஈ) உடற் தகைமைகள் :

எல்லா விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்கும், பதவிக்குரித்தான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் எல்லா வகையிலும் உடல் மற்றும் உள ரீதியாக தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(உ) ஏனைய :

I. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
II. நன்நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
III. ஏதேனும் சமயப் பிரிவொன்றின் துறவிப் பதவியை வகிக்கும் ஒருவர் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமை அற்றவராவார்.
IV. பதவியில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு அவசியப்படும் சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ஊ) வயதெல்லை :

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பதினெட்டு (18) வயதுக்கு குறையாமலும் முப்பது (30) வயதினை விட மேற்படாதிருத்தலும் வேண்டும்.

06. **ஆட்சேர்ப்பு முறை :**

எழுத்துப் போட்டிப் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சையின் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்தும் விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கிற்கு ஏற்ப திறந்த ஆட்சேர்ப்பிற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையினர் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

(அ) **எழுத்துப் பரீட்சை** :

பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய இரண்டு (02) வினாப் பத்திரங்களைக் கொண்டு எழுத்துப் பரீட்சை நடாத்தப்படும். ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைய பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய குறைந்தபட்ச புள்ளியின் அளவு பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| *பாடங்கள்* | *நேரம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடைய பெறவேண்டிய ஆகக் குறைந்தபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01. நுண்ணறிவுத் தேர்வு | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| 02. தொழில்நுட்பம் (அவ்வந்த பதவிக்குரிய விடயப் பரப்புடன் கூடிய பரீட்சையாகும்.) | 02 மணித்தியாலம் | 100 | 40 |

பரீட்சார்த்திகள் சகல வினாப் பத்திரங்களுக்கும் தோற்ற வேண்டும் என்பதோடு அனைத்து வினாக்களுக்கும் ஒரு மொழியில் மாத்திரம் விடையளித்தல் வேண்டும்.

i. பரீட்சை பெறுபேறுகள் - விண்ணப்பதாரர்களுக்குப் பரீட்சை பெறுபேறுகளை அறிவித்தல், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் தபால் மூலம் அல்லது www.slida.lk எனும் இணையத்தளத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

07. **பரீட்சைக்கான பாடத் திட்டம்** :

| *வினாத் தாளின் பெயர்* | *பாடத் திட்டம்* |
|---|---|
| 01. நுண்ணறிவுத் தேர்வு | பரீட்சார்த்தியிடம் காணப்படும் பொது நுண்ணறிவு, தர்க்க ரீதியான திறன், கருத்து வெளிப்பாட்டுத் திறன், எண்ணியல் திறன் மற்றும் கிரகித்தல் திறன் ஆகியவற்றை அளவிடுவதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. |
| 02. தொழில்நுட்பம் - அந்தந்த பதவிகளுக்குரிய தொழில் நுட்ப மற்றும் விடயப்பரப்புடன் கூடிய பரீட்சையாகும். | பதவிக்குரிய தொழில்நுட்ப அறிவை அளவிடும் செயற்பாடு இதனால் எதிர்பார்க்கப்படுகின்றது. |

08. **பரீட்சைக் கட்டணம்** :

பரீட்சைக் கட்டணம் ரூபா. 1200 ஆகும். மேலும், அந்தப் பரீட்சைக் கட்டணத்தை "தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகம்" (Director General of National Archives) எனும் பெயரில் மக்கள் வங்கியின் திம்பிரிகஸ்யாய கிளையிலுள்ள 086-1001-3902-6218 எனும் வங்கிக் கணக்கிலக்கத்தில் வைப்புச் செய்து, விண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை, அதன் ஒரு விளிம்பின் ஊடாக விண்ணப்பப்பத்திரத்தின் குறித்த இடத்தில் கழன்று விடாதவாறு ஒட்டப்படுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் வேறு பரீட்சை ஒன்றிற்கு மாற்றப்படவும்படமாட்டாது. அவ்வாறே பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக்கொள்வது பயனளிக்கும்.

09. **விண்ணப்பிக்கும் முறை** :

(அ) விண்ணப்பப்படிவம் இவ் அறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கு ஏற்ப அமைதல் வேண்டும் என்பதோடு, அது 8 1/2 " x 12 " என்ற அங்குல (ஏ 4) அளவுடைய கடதாசியில் தயாரித்து விண்ணப்பதாரி தனது சொந்த கையெழுத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும். கணினியினால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தையும் பயன்படுத்த முடியும். விண்ணப்பம் ஒரு மொழியினால் மாத்திரம் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் தலைப்புக்கள் இலக்கம் 01 தொடக்கம் 04 வரை முதல் பக்கத்தில் உள்ளடங்கும் வண்ணம் தயாரித்தல் வேண்டும்.

(ஆ) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கிய வகையில் தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களும் முழுமையாகத் தகவல்கள் வழங்கப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். (பூர்த்தி செய்யப்பட்ட

விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடும்.) பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக உள்ளதா என்பதை விண்ணப்பதாரரி உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாது விடின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட முடியும்.

(இ) பரீட்சைக்காக நிரப்பிய விண்ணப்பப்படிவத்தை பதிவுத் தபாலில் 2026.03.20 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் "தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகம், தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களம், பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு 07." என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதியின் கட்டிடப் பராமரிப்பு உத்தியோகத்தர் (சிவில்) மற்றும் கட்டிடப் பராமரிப்பு உத்தியோகத்தர் (இயந்திர) பதவிகளில் ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025" எனறு தெளிவாக எழுதி அனுப்புதல் வேண்டும். 2026.03.20 ஆந் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ஈ) விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, முப்படையில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது ரூபா. 240,360.00 இற்கு கூடுதலான வருடாந்த அடிப்படை சம்பளம் பெறும் அரசாங்க நிரந்தர பதவியொன்றை வகிக்கும் பதவிநிலை தரத்துடைய உத்தியோகத்தரினால் சான்றுபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(உ) முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் விண்ணப்பப்படிவம் காணாமற் போதல் அல்லது தாமதமடைதல் பற்றிய எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி வரை விண்ணப்பங்களை அனுப்ப தாமதப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய இழப்புக் களை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

(ஊ) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக எந்த வொரு அறிவித்தலும் வழங்கப்படமாட்டாது. பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை களையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித் துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின்படி, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப் பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்குரித்தான பற்றுச்சீட்டுடன் திருத்தமாக பூர்த்தி செய்துள்ள விண்ணப்பங்களை அனுப்பி வைத்த விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படும். (பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பப் பட்டவுடன் அது தொடர்பாக அறிவித்து அறிவித்தலொன்று இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.slida.lk) பிரசுரிக்கப் படும். அறிவித்தல் வெளியாகி 03 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்தி எவரேனும் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அது குறித்து இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் (SLIDA) பரீட்சைக் கிளையின் 011-5980264 அல்லது 011-5980225 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 08.30 முதல் பி.ப. 4.00 மணி வரை வினவ முடியும். அவ்வாறு வினவும் போது விண்ணப்பதாரி தான் தோற்றும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை திருத்தமாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தினால் வினவப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக தன்வசம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்யப்பட்ட

பற்றுச் சீட்டினையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும். அதேபோன்று, பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் அது குறித்து அறிவிக்கும் குறுஞ்செய்தி (SMS) ஒன்று இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தினால் அனுப்பிவைக்கப்படும்.

10. **பரீட்சைக்கு தோற்றுதல் :**

(அ) சகல விதத்திலும் முழுமைப்படுத்திய விண்ணப்பங் களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். தனது பரீட்சை அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பிக்காத எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அளிக்கப்பட மாட்டார்கள்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். சகல பரீட்சார்த்தியும் குறித்த பரீட்சை மண்டபத்திற்கு தமக்குரிய அனுமதி அட்டையில், தமது ஒப்பத்தை உறுதிப்படுத்தி முதலில் அம்மண்டபத்தில் தோற்றுகின்ற நாளில், அம்மண்டப பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

குறிப்பு : பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது, அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமை கொண்ட வராகக் கருதப்பட மாட்டார்.

(இ) பரீட்சார்த்தி/ பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத் தினுள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வருவன வற்றுள் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும்.

I. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள தேசிய ஆளடையாள அட்டை;
II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு ;
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் உள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

11. **போலியான தகவல்களுக்கான தண்டனை :**

எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் என தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்தத்தன்மையை இரத்துச் செய்வதற்கு வாய்ப்பிருக்கின்றது. பரீட்சார்த் தியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் போலியானது என தெரிந்து வேண்டுமென்றே சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக அறியவந்தால், அவ்வா றில்லையெனில், ஏதேனும் முக்கியமான தகவலை அவர் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவரை அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்வதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்படும். பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கு சகல பரீட்சார்த்திகளும் கீழ்ப்படிதல் வேண்டும்.

12. **ஏனைய விடயங்கள் :**

இவ்விதிமுறைகளில் கருத்திற் கொள்ளப்படாத விடயங்கள் தொடர்பில் தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகத்தின் முடிவின் படி நடவடிக்கை எடுக்கப்படும்.

தேசிய சுவடிகள் கூடப் பணிப்பாளர் நாயகம்.

தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களம்,
இலக்கம் 07, பிலிப் குணவர்தன மாவத்தை,
கொழும்பு 07,
2026, பெப்புருவரி 20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

அலுவலக உபயோகத்திற்காக

மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவை வகுதியின் கட்டிடப் பராமரிப்பு உத்தியோகத்தர் (சிவில்) மற்றும் கட்டிடப் பராமரிப்பு உத்தியோகத்தர் (இயந்திர) பதவிகளுக்கான ஆட்சேர்ப்பிற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026
Open Competitive Examination for Recruitment to the post of Supervising Management Assistant Technical Services Category Building Maintenance Officer (Civil) / Building Maintenance Officer (Mechanical) of the Department of National Archives - 2026

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

விண்ணப்பிக்கும் பதவி / பதவிகள் :
சிவில் - 1
இயந்திர - 2

1. முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
(உதா: HERATH MUDIYANSELAGE SAMAN RATHNAYAKA)

(ஆ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :
..........................................................................................................................................................
(உதா: H.M.S. RATHNAYAKA)

(இ) முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

2. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

(ஆ) அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி ( ஆங்கில கெப்பிடல் எழுத்தில்)
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

(இ) அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி ( சிங்களத்தில்/ தமிழில்) :
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

4. பெண்/ஆண் பால் நிலை: .......................................
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

ஆண் - 0
பெண் - 1

5. கையடக்கத் தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

6. (ஆ) மின்னஞ்சல் முகவரி (e-mail) முகவரி :

.....................................................................................................................................................................

7. பிறந்த திகதி : வருடம்: | | | மாதம்: | | | திகதி: | | |

8. (ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :

வருடம்: | | | மாதம்: | | | திகதி: | | |

9. கல்வித் தகைமைகள் :

(அ) க.பொ.த (சா/தர) - முதற் தடவை

பரீட்சைக்குத் தோற்றிய வருடம் :

பரீட்சை சுட்டிலக்கம் :

| *பாடம்* | *சித்திகள்* | *பாடம்* | *சித்திகள்* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(அ) க.பொ.த (சா/தர) - இரண்டாம் தடவை

பரீட்சைக்குத் தோற்றிய வருடம் :

பரீட்சை சுட்டிலக்கம் :

| *பாடம்* | *சித்திகள்* | *பாடம்* | *சித்திகள்* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(இ) க.பொ.த (உ/தர)

பரீட்சைக்குத் தோற்றிய வருடம் :

பரீட்சை சுட்டிலக்கம் :

| *பாடம்* | *சித்திகள்* | *பாடம்* | *சித்திகள்* |
|---|---|---|---|
| | | | |
| | | | |

10. தொழில்சார் தகைமைகள் :

| *நிறுவனம்* | *பாடநெறியின் பெயர்:* | *கால வரையறை* | *சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

11. பரீட்சைக் கட்டணம் ( பற்றுச்சீட்டை இணைத்து அனுப்புதல் வேண்டும்.)

I. செலுத்தப்பட்ட வங்கி : ........................................................................................................
II. செலுத்திய தொகை :………………………………………………
III. செலுத்திய திகதி : ....................................................................
IV. பற்றுச்சீட்டு இலக்கம் : ..................................

பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கே ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடும்.)

12. விண்ணப்பதாரியின் சான்றுரை :

இவ் விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு மற்றும் நம்பிக்கையின் பிரகாரம், உண்மையானதும் சரியானதும் என சான்றுரைக்கின்றேன். வழங்கப்படும் தகவல்கள் போலியானது என நான் தெரிவு செய்யப்பட முன்னர் தெரியவருமாயின் நான் தகுதியற்றவர் எனவும், நியமனம் செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து எந்தவொரு இழப்பீடும் இன்றி நான் சேவையிலிருந்து இடைநிறுத்தப்படுவதற்கும் கட்டுப்பட்டுள்ளேன் என அறிந்திருக்கின்றேன். மேலும், பரீட்சை நடாத்துவது தொடர்பாகவும் அதன் பெறுபேறுகளை வெளியிடுவது குறித்தும் இலங்கை நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கும் நான் கட்டுப்பட்டுள்ளேன் எனவும் சான்றுரைக்கின்றேன்.

.....................................................
திகதி : ........................................... கையொப்பம்

13. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல் : (ஏற்புடையதற்ற சொற்களை நீக்கவும்.)

இவ்விண்ணப்பப்படிவத்தினை சமர்பிக்கின்ற திரு /திருமதி / செல்வி............................................................ ஆகிய நான் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், அவர் .................. மாதம்........................ ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பம் இட்டதாகவும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது எனவும், அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதாகவும் இதனால் சான்றுப்படுத்துகின்றேன்.

சான்றுப்படுத்துநரின் கையொப்பம் : .....................................................

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப் பெயர் : ..................................................................

பதவி:…………………………………………………………..…

முகவரி :……………………………………………………..

(உத்தியோகபூர்வ பதவி முத்திரை)

திகதி ..................................................................................

**குறிப்பு** : விண்ணப்பத்தை சான்றுப்படுத்த வேண்டியது வர்த்தமானி அறிவித்தலின் 9 ஆம் பந்தியில் (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

14. நிறுவனத் தலைவரின் பரிந்துரை :

இவ்விண்ணப்பப்படிவத்தினை முன்வைக்கின்ற திரு / திருமதி / செல்வி ...................................................... என்பவர் இவ்வமைச்சில் / திணைக்களத்தில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் சேவையில் பணியாற்றுகின்றார் என்பதோடு, அவர் மேற்படி பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படுவாராயின் இந்நிறுவனத்தின் சேவையில் இருந்து விடுவிக்க முடியும்.

................................................................................

உத்தியோகபூர்வ இறப்பர் பதவி முத்திரை
நிறுவனத் தலைவரின் கையொப்பம்

திகதி : .......................................

நிறுவனத் தலைவரின் பெயர்: .........................................................................

பதவி:…………………………………………………………..…

சேவை நிலையத்தின் முகவரி: ..............................................................................

2-395

## பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் தரம் I, தரம் II மற்றும் தரம் III இன் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2025(II) 2026

1.0 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் I, தரம் II மற்றும் தரம் III இன் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை - 2025(II) 2026 (சேவைப் பிரமாணத்தின் பந்தி 08) பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேற்பார்வையின் கீழ், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் 2026 மே மாதம் மாவட்ட மட்டத்தில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இப்பரீட்சைக்குரிய பரீட்சை மத்திய நிலையங்களை நிறுவுவதற்கு எதிர்பார்க்கப்படும் மாவட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| மாவட்டம் |
|---|
| 1. கொழும்பு |
| 2. கண்டி |
| 3. மாத்தறை |
| 4. குருநாகல் |
| 5. அனுராதபுரம் |
| 6. இரத்தினபுரி |
| 7. பதுளை |
| 8. மட்டக்களப்பு |
| 9. வவுனியா |

விண்ணப்பிக்கும் மாவட்டம் பின்னர் மாற்றப்படுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

2.0 இப்பரீட்சை இலக்கம் 1840/34 மற்றும் 2013.12.11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் சேவை பிரமாணக் குறிப்பின் பந்தி 8, பந்தி 15 இனது இடைக்கால ஏற்பாடுகள், இணைப்பு 04, 05 மற்றும் 06 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடைபெறும்.

3.0 மேற்கூறிய சேவையில் ஒவ்வொரு தரத்துக்கும் ஏற்புடைய வகையில் நடத்தப்படவுள்ள வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் பின்வருமாறு.

| *தொடர் இலக்கம்* | *பரீட்சையின் பெயர்* | *குறியீட்டுப் பெயர்* |
|---|---|---|
| 01. | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் I உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை – 2025(II)2026 | MSO - I |
| 02. | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் II உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2025(II)2026 | MSO - II |
| 03. | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2025(II)2026 | MSO - III |

4.0. இப் பரீட்சை தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள சட்டவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் உட்படுவர். இந்த விதிகளை மீறினால், ஒழுக்காற்று அதிகாரியினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும். விண்ணப்பிக்கும் போது அடிப்படை தகவல்களான பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம், மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி இலக்கம் சரியாக உள்வாங்கப்பட்டுள்ளதென எதிர்பார்க்கப்படும். அதன்படி பிழையான தகவல்களை உட்செலுத்துவதினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் பெறாமை அல்லது பரீட்சைக்கு தோன்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்காமை அல்லது பரீட்சை பெறுபேறுகளை வெளியிடாமை தொடர்பிலான பொறுப்பு விண்ணப்பதாரிக்குரியதென கவனத்தில் எடுத்தல் வேண்டும்.

5.0 இப் பரீட்சைக்கு இணையத்தளத்தின் மூலம் நிகழ்நிலை முறையில் (Online) இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.slida.lk இனுள் பிரவேசிப்பதன் மூலம் விண்ணப்பிக்க முடியும். இணையத்தளத்தின் முதல் பக்கத்தில் "Apply for Examinations" என்ற நீட்சி மூலம் அல்லது நேரடியாக https://examinationportal.slida.lk/ இற்குள் பிரவேசிப்பதன் மூலம் பயன்பாட்டு கணக்கொன்றை (User Account) உருவாக்க வேண்டியதுடன் அதன் பின்னர் உரிய பரீட்சை விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்ய முடியும். நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பத்தை ஆங்கில மொழியில் மட்டுமே பூர்த்தி செய்ய வேண்டும்.

2026.02.21 ஆம் திகதி மு.ப 8.00 மணி முதல் 2026.03.13 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி வரை மட்டுமே பரீட்சை விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்ய முடியும்.

விண்ணப்பிக்கும் படிமுறைகள் அடங்கிய அறிவுறுத்தல் ஆவணத்தை www.slida.lk இணையத்தளத்தின் பரீட்சை நுழைவாயிலுக்கு (Examination Portal) பிரவேசிப்பதன் மூலம் PDF வடிவில் தரவிறக்கம் செய்துகொள்ள முடியும் என்பதோடு, விண்ணப்பிப்பதற்கு முன்னர் குறித்த அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு விண்ணப்பதாரர்களுக்கு அறியத்தரப்படுகின்றது.

6.0 i. பரீட்சைக் கட்டணம் - முதல் முறையாக இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் உத்தி யோகத்தர்களால் பரீட்சைக் கட்டணம் எதுவும் செலுத்தப்பட வேண்டியதில்லை. இருப்பினும், அதற்கடுத்த அமர்வுகளில் உத்தியோகத்தர் களால் ஒரு பாடத்துக்கு ரூ 250.00 வீதம் செலுத்தப்படல் வேண்டும்.

ii. குறித்த பரீட்சைக் கட்டணம் கீழ்வரும் கணக்கில் வைப்பிலிடப்பட வேண்டும்.

கணக்கு பெயர் - செயலாளர், பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
கணக்கு இலக்கம் - 310100119027430
வங்கி - மக்கள் வங்கி - பம்பலபிட்டி கிளை

iii. உங்களால் மேற்கொள்ளப்படும் செலுத்துகைக் குரிய பற்றுச்சீட்டின் இலக்கம் விண்ணப்பப் படிவத்திற்கு உட்செலுத்த வேண்டும் என்பதுடன் பணப்பற்றுச்சீட்டின் நிழற்படமொன்றை பரீட்சை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் தரவேற்றம் (upload) செய்ய வேண்டும்.

iv. மேலும், கணக்கிற்கு பணம் செலுத்தும் போது பணம் செலுத்துபவராக விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் விண்ணப்பதாரரின் தேசிய ஆளடையாள அட்டை இலக்கமும், பணம் செலுத்தப்படுவதற்கான காரணம் எனும் இடத்தில் உரிய பரீட்சையின் குறியீட்டுப் பெயரையும் உள்வாங்கி வரவுச் சீட்டினை பூரணப்படுத்த வேண்டும். நிகழ்நிலை (Online) முறைக்கு பணம் செலுத்தும் உத்தியோகத்தர்களும் பற்றுசீட்டில் மேற்படி தகவல்களை குறிப்பிடுதல் வேண்டும்.

(பரீட்சைகளின் குறியீட்டுப் பெயர்கள் பந்தி 03 இல் காட்டப்பட்டுள்ளவாறு அமைய வேண்டும்)

7.0 நிகழ்நிலை முறையில் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது விண்ணப்பதாரரிடம் செயலில் உள்ள மின்னஞ்சல் முகவரி (e-mail) மற்றும் தொலைபேசி இலக்கம் காணப்படுவது கட்டாயமானதாகும். விண்ணப்பிக்கும் போது ஒரு மின்னஞ்சல் முகவரியை பயன்படுத்த முடிவது ஒரு பயன்பாட்டு கணக்கிற்கு மட்டுமாகும்.

விண்ணப்பத்தை நிகழ்நிலை முறையில் அனுப்பிய பின்னர், பூர்த்தி செய்யப்படாத (Draft) விண்ணப்பங்கள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படும் வரை உறுதிப்படுத்தல் செய்தி எதுவும் அனுப்பப்பட மாட்டாது என்பதோடு, முழுமையாகப் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு மாத்திரம் நீங்கள் வழங்கியுள்ள மின்னஞ்சல் முகவரிக்கும் மற்றும் கைபேசி இலக்கத்திற்கும் உறுதிப்படுத்தல் செய்தி அனுப்பி வைக்கப்படும். உரிய தேதிக்குள் பூர்த்தி செய்து அனுப்ப முடியாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பத்தை அனுப்பும் கால எல்லை நிறைவடைந்த பின்னர் பரீட்சை அனுமதிப் பத்திரம் அனுப்பப்படும் என்பதுடன், உங்களின் மின்னஞ்சல் முகவரிக்கு பிரவேசித்து பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை தரவிறக்கம் (Download) செய்ய முடியும்.

8.0 நிகழ்நிலை முறையில் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் செயன்முறை தொடர்பில் ஏதேனும் தொழில்நுட்ப சிக்கல் எழுந்தால், அது தொடர்பிலான விசாரணைகளுக்கு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் தொழில்நுட்பப் பிரிவின் 011-4513366 மற்றும் 011-4513368 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கும், ஏனைய அனைத்து விசாரணைகளுக்கும் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணைந்த சேவைகள் பிரிவின் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பரீட்சைகள் கிளையின் 011-2696211 (நீட்சி – 511/299/503) ஆகிய தொலைபேசி இலக்கமும், 011-2698649, 011-2684404, 011-2699400 ஆகிய இலக்கங்களுக்கும் 2026.02.21 ஆம் திகதி முதல் 2026.03.13 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.4:30 வரை திறந்து வைக்கப்பட்டுள்ளன.

9.0 விண்ணப்பதாரர்களின் பரீட்சார்த்த தன்மையை உறுதிப்படுத்துவது அவசியமாயின், 011-5980263 அல்லது 011-5980264 ஊடாக அதனை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். பரீட்சைக்கு வருகை தருவதற்கான பிரயாணச் செலவுகள் எதுவும் செலுத்தப்பட மாட்டாது.

10.0 பரீட்சார்த்திகளின் அடையாளம் - பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தங்கள் அடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்கு, பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

(i) தேசிய ஆளடையாள அட்டை
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

மேற்படி ஆவணமொன்றை சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரரின் பரீட்சார்த்தித்தன்மை இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்து செய்யப்படலாம்.

11.0 சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் இப்பரீட்சை நடைபெறுவதோடு உரிய சேவைக்கு நுழைவதற்கு பரீட்சைக்குத் தோற்றிய மொழியில் அல்லது அரசகரும மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உத்தியோகத்தர்களுக்கு முடியும். போட்டிப் பரீட்சையின்றி சேவையில் இணைந்த உத்தியோகத்தர்களும் தாம் கல்வி கற்ற மொழி மூலத்திலோ அல்லது அரசகரும மொழியொன்றிலோ இப்பரீட்சைக்குத் தோற்றலாம். பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மொழி மூலத்தினை பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது.

12.0 உத்தியோகத்தர்கள் தாம் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட அமர்வுகளிலும் தோற்றலாம்.

13.0 பரீட்சைப் பெறுபேறுகள் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டதன் பின்னர், இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத்தளத்தில் அப்பெறுபேறுகள் வெளியிடப்படும். அப் பெறுபேறுகளின்படி, குறித்த திணைக்களத் தலைவர்கள் உத்தியோகத்தர்களது பதவி உயர்வு நடவடிக்கைகளுக்காக பரிந்துரைகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

14.0 பரீட்சை நடைமுறை : ஒவ்வொரு வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சைக்கும் தோற்றுவதற்கு இயலுமான விண்ணப்பதாரிகளுக்கு உரித்தான பாடம் மற்றும் பாடவிதானம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

14.1 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் I இற்கான வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை

14.1.1 இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது விண்ணப்பதாரிகளினால் 2013.12.11 ஆந் தேதிய 1840/34 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை பிரமாணக்குறிப்பின் பந்தி 15 இனது இடைக்கால ஏற்பாடுகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் 3ஆம் இலக்க பகுதி மற்றும் இது தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் அறிவிக்கப்படும் வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டும்.

14.1.2 தகைமைகள்: முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் உள்ள தரம் I இலுள்ள பதவிக்கு தரமுயர்த்தப்பட்ட அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவராவர் தரம் I இற்கு தரமுயர்த்தப்பட்டு 05 வருடங்களுக்குள் இப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

14.1.3 பின்வரும் பாடங்களை உள்ளடக்கும் எழுத்துப் பரீட்சை ஒன்றிற்கு பரீட்சார்த்திகள் தோற்ற வேண்டும்

| *பாடம்* | *பாட இலக்கம்* | *நேரம்* | *மொத்தப் புள்ளிகள்* | *வெட்டுப் புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| தாபனப் பணிகளும் செயலொழுங்கு விதிகளும் | 01 | 01 ½ மணித்தியாலம் | 100 | 40 |
| அரச நிதி முகாமை | 02 | 01 ½ மணித்தியாலம் | 100 | 40 |
| சமகாலப் போக்குகள் | 03 | 01 மணித்தியாலம் | 100 | 40 |

14.1.4 தாபனப் பணிகளும் செயலொழுங்கு விதிகளும் (பாட இலக்கம் - 01)

அலுவலக முறைமைகளின் அடிப்படைகள், அவற்றின் முக்கியத்துவம், எழுத்து மூலமான தொடர்பாடல், ஆவணங்களைக் கோவைப்படுத்தல், மாதிரிப்படிவங்களைத் தயாரித்தல் போன்ற துறைகளை உள்ளடக்கிய வகையில் அரசாங்க அலுலகங்களில் பயன்பாட்டிலுள்ள அலுவலக முறைகள் பற்றிய அறிவு, அலுவலகச் செயற்பாடுகளின் போது பெற்றுக்கொண்ட அனுபவத் தேர்ச்சி என்பனவற்றை பரீட்சிப்பதற்கான பகுதி, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிகள் I ஆம் தொகுதி, தாபன விதிக்கோவையின் தொகுதி I மற்றும் II ஆம் தொகுதி என்பவற்றில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் தொடர்பான அறிவு என்பவற்றைப் பரீட்சிக்கும் பகுதி என்பனவற்றை இவ்வினாப்பத்திரம் உள்ளடக்கியிருக்கும்.

பகுதி I - பல்தேர்வு வினாக்களை உள்ளடக்கும் ஒரு வினாத்தாளாகும். காலம் 30 நிமிடங்கள் ஆகும் . (25 புள்ளிகள்)

பகுதி II - பகுதிக் கட்டமைப்புடன் கூடிய கட்டுரை வினாக்களை உள்ளடக்கும் ஒரு வினாத்தாளாகும். நான்கில் மூன்று வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். காலம் 60 நிமிடங்கள் ஆகும் . (75 புள்ளிகள்)

14.1.5 அரச நிதி முகாமை (பாட இலக்கம் - 02)

அரசாங்கத் திணைக்களங்களிலும் அமைச்சுக்களிலும் பயன்பட்டிலுள்ள நிதிக் கட்டுப்பாடு, நிதிப் பொறுப்புக்கள், வருமானங்களும் கொடுப்பனவுகளும், வரவு செலவுத் திட்ட மதிப்பீடு, வழங்கல் வேலைகள் மற்றும் சேவைகள் ஆகிய விடயங்கள் (தொகை மதிப்பீடு, களஞ்சியப்படுத்தல், நிதி ஒழுங்குவிதிகள், கணக்காய்வு பற்றிய அடிப்படை அறிவு, வங்கி தொடர்பான அடிப்படை பரீட்சயம்) தொடர்பான அறிவும் விளக்கமும் இவ்வினாப் பத்திரத்தின் மூலம் பரீட்சிக்கப்படும்.

பகுதி I - பல்தேர்வு வினாக்களை உள்ளடக்கும் ஒரு வினாத்தாளாகும். காலம் 30 நிமிடங்கள் ஆகும் . (25 புள்ளிகள்)

பகுதி II - பகுதிக் கட்டமைப்புடன் கூடிய கட்டுரை வினாக்களை உள்ளடக்கும் ஒரு வினாத்தாளாகும். நான்கில் மூன்று வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். காலம் 60 நிமிடங்கள் ஆகும். (75 புள்ளிகள்)

இவ்வினாப்பத்திரம், உள்நாட்டு மற்றும் சர்வதேச நிகழ்வுகள் தொடர்பான சமகால அறிவைப் பரீட்சிக்கும் பகுதியினையும், அலுவலக முகாமை தொடர்பான புதிய போக்குகள், அரசாங்க சேவையின் சேவை வழங்கல் தொடர்பான புதிய போக்கு மற்றும் நல்லாட்சி தொடர்பிலான அறிவினை பரீட்சித்தலுக்கான பகுதியினையும் இவ்வினாப்பத்திரம் உள்ளடக்கியிருக்கும். இவ் வினாத்தாள் பல்தேர்வு வினாக்கள் மற்றும் சுருக்க விடைகள் வழங்கக்கூடிய வகையான வினாக்களை உள்ளடக்கும்.

(சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.)

14.2 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் II இற்கான வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை

14.2.1 இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது விண்ணப்பதாரிகளினால் 2013.12.11 ஆந் திகதிய மற்றும் 1840/34 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு

அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை பிரமாணக் குறிப்பின் பந்தி 15 இனது இடைக்கால ஏற்பாடுகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் 2ஆம் இலக்க பகுதி மற்றும் இது தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் அறிவிக்கப்படும் வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டும்.

14.2.2 தகைமைகள் : முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் உள்ள தரம் II ற்கு தரமுயர்த்தப்பட்டுள்ள அலுவலர்கள் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமை பெறுவர்.

தரம் II இற்கு பதவியுயர்த்தப்பட்டு மூன்று வருடங்களுக்குள் இப்பரீட்சையில் சித்தி பெறுதல் வேண்டும்.

14.2.3 பின்வரும் பாடங்களை உள்ளடக்கும் எழுத்துப் பரீட்சை ஒன்றிற்கு பரீட்சார்த்திகள் தோற்றுதல் வேண்டும்.

| *பாடம்* | *பாட இலக்கம்* | *நேரம்* | *முழுப் புள்ளிகள்* | *வெட்டுப்புள்ளி* |
|---|---|---|---|---|
| அலுவலக முறைமை களும் பணிச்செயலொழுங்குகளும் | 04 | 02 மணித்தியாலம் | 100 | 40 |
| அரசாங்க அலுவலகங்களில் பயன்பாட்டிலுள்ள கணக்கீட்டு முறைகள் | 05 | 02 மணித்தியாலம் | 100 | 40 |

14.2.4 அலுவலக முறைமைகளும் பணிச்செயலொழுங்குகளும் (பாட இலக்கம் - 04)

அரசாங்க அலுவலகங்களில் பயன்பாட்டிலுள்ள அலுவலக முறைகள் தொடர்பான அறிவு, அவ்வறிவை நடைமுறையில் பிரயோகிக்கும் ஆற்றல் என்பன பரீட்சித்தல் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

பகுதி I - பல் தேர்வு வினாத்தாள். நேரம் 30 நிமிடங்கள். 25 புள்ளிகள்.

பகுதி II - ஒரு பகுதியளவு-கட்டமைக்கப்பட்ட கட்டுரை வினாத்தாள். நான்கு வினாக்களில் மூன்றிற்கு விடையளித்தல் வேண்டும். நேரம் 90 நிமிடங்கள். 75 புள்ளிகள்.

14.2.5 அரசாங்க அலுவலகங்களில் பயன்பாட்டிலுள்ள கணக்கீட்டு முறைமைகள் (பாட இலக்கம் - 05)

அரசாங்க அலுவலகங்களில் பயன்பாட்டிலுள்ள கணக்கீட்டு முறைமைகள், கணக்கீட்டு கட்டுப்பாட்டு ஏடுகள், அவை தொடர்பில் திறைசேரியினால் வெளியிடப்பட்டுள்ள நிதி அறிவுறுத்தல்கள், கட்டளைகள் தொடர்பான அறிவு, அவ்வறிவை நடைமுறையில் பிரயோகிக்கும் ஆற்றல் என்பன பரீட்சித்தல் இவ்வினாத்தாள் மூலம் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

பகுதி I - பல் தேர்வு வினாத்தாள். நேரம் 30 நிமிடங்கள். 25 புள்ளிகள்.

பகுதி II - ஒரு பகுதியளவு-கட்டமைக்கப்பட்ட கட்டுரை வினாத்தாள். நான்கு வினாக்களில் மூன்றிற்கு விடையளித்தல் வேண்டும். நேரம் 90 நிமிடங்கள். 75 புள்ளிகள்.

14.3 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கான வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை

14.3.1 இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது விண்ணப்பதாரிகளினால் 2013.12.11 ஆந் திகதிய மற்றும் 1840/34 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை பிரமாணக் குறிப்பின் பந்தி 15 இனது இடைக்கால ஏற்பாடுகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் 1ஆம் இலக்க பகுதி மற்றும் இது தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் அறிவிக்கப்படும் வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டும்.

14.3.2 தகைமைகள் : முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் உள்ள தரம் III யிலுள்ள அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறுவர்.

தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு மூன்று வருடங்களுக்குள் இப்பரீட்சையில் சித்தி பெறுதல் வேண்டும்.

14.3.3 பின்வரும் பாடங்களை உள்ளடக்கும் எழுத்துப் பரீட்சை ஒன்றிற்கு பரீட்சார்த்திகள் தோற்றுதல் வேண்டும்.

| *பாடம்* | *பாட இலக்கம்* | *புள்ளிகள்* | *நேரம்* | *வெட்டுப்புள்ளி* |
|---|---|---|---|---|
| அலுவலக முறைமை | 06 | 100 | 02 மணித்தியாலம் | 40 |
| கணக்கீட்டு முறைமை | 07 | 100 | 02 மணித்தியாலம் | 40 |
| கணினிப் பரீட்சை | 08 | 100 | 01 ½ மணித்தியாலம் | 40 |

14.3.4 அலுவலக முறைமை (பாட இலக்கம் - 06)

அரசாங்க அலுவலகங்களில் பயன்பாட்டிலுள்ள அலுவலக முறைமைகள் பற்றிய அடிப்படை அறிவு, அவ்வறிவை நடைமுறையில் பயன்படுத்தும் ஆற்றல், உத்தியோகபூர்வ ஆவணங்களை உரியமுறையில் விளங்கி தெளிவானதும் சுருக்கமானதுமான குறிப்புக்கள் ஊடாக தமது கருத்துக்களை / அவதானிப்புக்களை உறுதியானமுறையில் சமர்ப்பிக்கும் ஆற்றல், கட்டளைக்கு ஏற்ப கடிதமொன்றினை வரைவு செய்யும் ஆற்றல் என்பன பரீட்சிக்கப்படும். இந்த வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

பகுதி I - குறுகிய பதில்கள் எதிர்பார்க்கப்படும் கேள்விகளைக் கொண்டுள்ளது. அனைத்து வினாக்களுக்கும் வினாத்தாளிலேயே விடையளித்தல் வேண்டும். (25 புள்ளிகள்)

பகுதி II - கட்டமைக்கப்பட்ட கட்டுரை வினாத்தாள். நான்கு வினாக்களில் மூன்றிற்கு விடையளித்தல் வேண்டும். (75 புள்ளிகள்)

14.3.5 கணக்கீட்டு முறைமை (பாட இலக்கம் - 07)

அரசாங்க அலுவலகங்களில் பயன்பாட்டிலுள்ள அடிப்படை கணக்குகள், கணக்கீட்டு முறைமைகள், கணக்கீட்டு கட்டுப்பாட்டு ஏடுகள் தொடர்பான விளக்கம் மற்றும் அறிவு என்பன பரீட்சித்தல் இவ்வினாத்தாள் மூலம் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இந்த வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

பகுதி I - குறுகிய பதில்கள் எதிர்பார்க்கப்படும் கேள்விகளைக் கொண்டுள்ளது. அனைத்து வினாக்களுக்கும் வினாத்தாளிலேயே விடையளித்தல் வேண்டும். (25 புள்ளிகள்)

பகுதி II - கட்டமைக்கப்பட்ட கட்டுரை வினாத்தாள். நான்கு வினாக்களில் மூன்றிற்கு விடையளித்தல் வேண்டும். (75 புள்ளிகள்)

14.3.6 கணினிப் பரீட்சை (பாட இலக்கம் - 08)

விண்ணபப்தாரருக்கு பின்வரும் திறன்கள் உள்ளதா என்பதை பரீட்சிப்பதே இப் பரீட்சையின் நோக்கமாகும்.

(i) தகவல் தொழில்நுட்பம் பற்றிய அடிப்படை எண்ணக்கருக்கள்
(ii) விண்டோஸ் தொழிற்பாட்டு முறைமை
(iii) கோவை முகாமை
(iv) சொல் உள்ளீடு x

அடிப்படைத் தேர்ச்சிகள், திரை பற்றிய பரீட்சயம், வசனங்களில் திருத்தம் செய்தல், வசன அமைவிடம், எழுத்துரு மற்றும் பண்புகள், பந்தியமைப்பு,பந்தி வரிகளுக்கிடையிலான இடைவெளிகளை மாற்றுதல்,

பாய்புள்ளி அமைப்பு (Tab setting), வசனங்களைத் தேடுதலும் மாற்றீடு செய்தலும், எழுத்துப்பிழை மற்றும் இலக்கணம், ஒத்தகருத்துச் சொற்கள், நிரல்களைப் பயன்படுத்தல், பக்க வடிவமைப்பு, ஆவணங்களை அச்சிடல், அட்டவணைகளை உருவாக்குதல். வாசகங்களை வகைப்படுத்தல், கோவை முகாமை, அஞ்சல்களை பல முகவரிக்கு அனுப்புதல், மாக்ரோ பயன்பாடு.

(v) விரிதாள்

அடிப்படைத் திறன்கள், வடிவமைத்தல் (Formatting), திருத்துதல், நிரல்கள் மற்றும் வீச்சுக்கள், சொருகுதலும் நீக்குதலும், தரவுகளை வகைபடுத்தல், வரைபுகளை உருவாக்கல், அச்சிடல், @ தொழிற்பாடு (@function), மக்ரோக்களின் பயன்பாடு, கோவை முகாமை

(vi) இணையம் மற்றும் மின்னஞ்சல்

இணையம் பற்றிய அறிமுகம், அடிப்படைத் தேர்ச்சிகள், மின்னஞ்சல்களைப் பெற்றுக்கொள்ளுதல், மின்னஞ்சல்களை அனுப்புதல், அவற்றுக்குப் பதிலளித்தல், இணைப்புக்களைப் பயன்படுத்துதல், முகவரிகளை இணங்காண்பதற்கு சுருக்கப்பெயர்களைப் பயன்படுத்தல், தகவல்களைத் தயாரித்தல்

இவ் வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

பகுதி I - 40 பல் தேர்வு / குறுகிய பதில் கேள்விகளைக் கொண்டுள்ளது. நேரம் 45 நிமிடங்கள். (40 புள்ளிகள்)

பகுதி II - 05 பகுதியளவு-கட்டமைக்கப்பட்ட கேள்விகள். நேரம் 45 நிமிடங்கள். (60 புள்ளிகள்)

15.0 இப்பரீட்சை அறிவிப்பில் ஏற்பாடுகள் செய்யப்படாத எந்தவொரு விடயம் தொடர்பிலும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானதாகும்.

16.0 இங்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களின் உரைகளுக்கு இடையில் ஏதேனும் பொருத்தமின்மை அல்லது முரண்பாடுகள் காணப்படின், அப்போது சிங்கள மொழிமூல அறிவித்தலே செல்லுபடியாகும்.

என்.யு. நிஷான் மெண்டிஸ்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2026, பெப்புருவரி 17.

02-396

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.